# சிவசிவ செண்பா

( ஆசிரியர் சென்னை மல்லையர் )



## ஆசிரியர்

சிவசிவ வெண்பா என்னும் சிறு நூலைப் பாடியவர் சென்ன மல்லையர் என்னும் புலவர்; இவர் வீரசைவர்; சிதம்பரத்திலே யுள்ள பச்சை கந்தையர் மடத்தைச் சார்ந்தவர்; சிவபக்தி நிறைந்தவர்; இவர் பாட்டுக்கள்தோறும் சிவிசிவ என்னும் மறை மொழி விரவுமாறு பாடியிருத்தலே அதற்கு உறு சான்றாகும். இவர் வாக்கு இனிமையாகவும் எளிதாகவும் உளது. இவரால் காட்டப்பட்டிருக்கும் உதாரணங்கள் பொருத்தம் உள்ளனவாகத் திகழ்கின்றன. இவர் காலம் இருநூறு ஆண்டுகட்கு மேற்படாதெனக் கூறலாம். திருக்குறளை விளக்கிக் காட்டக் கதைகளை அமைத்து முதன்முதல் நூல் இயற்றியவர் அவராகவே இருக்கலாமெனத் தோன்றுகிறது. இவருடைய நூலுக்குப் பின் எழுந்த நூல்கள் பல. சோமேசர் முதுமொழி வெண்பா, முருகேசர் முது நெறி வெண்பா, இரங்கேச வெண்பா முதலியன இந்நூலுக்குக் காலதாற் பிற்பட்டவையே. இது திருக்குறள் கற்பிக்கும் முறையிலே ஒன்று, இளைஞருக்குப் பெரிதும் பயன் தரற்பாலது;சபையை ரமிக்கச் செய்பவருக்குத் தனிப் பெருந்துணையாவது.

**மணி. திருநாவுக்கரசு முதலியார்.**

கணபதி துணை

# சிவசிவ வெண்பா

## காப்பு

தெள்ளுலக நீதி சிவசிவா என்றுதிரு
வள்ளுவர்வெண் பாவால் வழுத்துறஎற்-குள்ளதுணை
கந்தனிலீ ராறான கைமே வியகருணைத்
தந்திமுகன் செம்பதுமத் தாள்.

வழுத்துற - துதிக்க. தந்தி - யானை. செம்பதுமம் - செந்தாமரை. தாள் - அடி.

## அவையடக்கம்

சிவசிவா வென்பாரிக் செய்யுட் டிறந்தேர்ந்து
எவர்களுமென் றஞ்சா திசைத்தேன்- கவிஞரியற்
பண்பா லுரைத்த பழமொழிமுன் னீதுமொரு
இசைத்தேன் - பாடினேன்.

## கடவுள் வாழ்த்து

விற்பிரம்பா லுற்றவடு மேவவுல கெங்குநிறை
சிற்பரனே தெய்வஞ் சிவசிவா-சொற்சிறந்த
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

வடு-தழும்பு. சிற்பரன்-சிவபெருமான். 1

## வான் சிறப்பு

பூமலர்கொ ணேரியற்கும் பூவையர்க்கும் பூமழைசெய்
தீமைநலங் கண்டோஞ் சிவசிவா-பூமுற்
கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

வான்-மழை. நேரியன்-சோழன். 2

## நீத்தார் பெருமை

நல்லசுக ருக்கன்றி நாணுவதென் வேதமுனி

செல்ல மடவார் சிவசிவா-சொல்லின்
உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

வேதமுனி-வேதலியாசர். உரன்-அறிவின் திண்மை.
வான்-மிக்கது. வைப்பு-வீட்டுநிலம். 3

### அறன்வலியுறுத்தல்

எய்தருமம் பாலுயீர்நீத் தெய்துபொழு தூங்கன்னன்
செய்தரும் மீந்தான் சிவசிவா-உய்யுநெறி
அன்றறிவாமென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துனை.

பொன்றுங்கால் - உயிர்போங்காலத்து.
பொன்றாத்துணை-அழிவில்லாத துணை. 4

### இல்வாழ்க்கை

எய்து சவுபரிக்கன் றீன்றமக ளாரைமணஞ்
செய்யவர சீந்தான் சிவசிவா-துய்யதவத்து
ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து.

நோன்மை-பொறை. 5

### வாழ்க்கைத்துணைநலம்

சத்தியந்தப் பாமலரிச் சந்திரற்குச் சந்தர்மதி
சித்தமொரு மித்தாள் சிவசிவா-புத்தியுடன்
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாற் பெண்.

தகை சான்ற-நன்மை யமைந்த. சொல்-புகழ். 6

### புதல்வரைப் பெறுதல்

மறலி செயன்மாற்றி வயதா னாற்பெற்ற
திறன்மகப் பேறாஞ் சிவசிவா-பெறுபேறு
எழுபிறப்புற் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

மறலி-யமன்-பண்பு-நற்குணம். 7

## அன்புடைமை

வேந்துரையாற் பூசைபுரி வேடன்மனை வெந்துமுன்போற்
சேர்ந்துபணி செய்தாள் சிவசிவா-ஒர்ந்தவிடத்து
அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த வுடம்பு.

உயிர் நிலை-உடம்பு. 8

## விருந்தோம்பல்

அன்னமிடான் பொன்னா டடைந்துந் தனதுடலைத்
தின்னெனவே தின்றான் சிவசிவா-மன்னியற்
செலவிருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

நல்விருந்து-எய்தாவிருந்து. வானத்தவர்-தேவர். 9

## இனியவை கூறல்

குன்றெடுத்தா னின்சொற் கொடுகருணை வாரிதியைச்
சென்றெடுத் தின்புற்றான் சிவசிவா-நன்றெடுத்த
இன்சொ லினிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

வாரிதி - கடல். 10

## செய்ந்நன்றியறிதல்

பூடணம்போல் வீடணன்மேற் போனவே லேற்ற
தேடமுடி யாதே சிவசிவா-நாடியெதிர் [நன்றி]
செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது

பூடணம்-ஆபரணம். வையகம் -பூமி. 11

## நடுவுநிலைமை

நங்கையுமை சொல்லால் நடுவிகந்த மால்வெருவு
செங்க ணரவானான் சிவசிவா-எங்குஞ்

சமன்செய்து சீத்தூக்குங் கோல்போ லமைந்தொரு
கோடாமை சான்றோர்க் கணி.                    [பாற்

நடு-நடுவுநிலைமை. இகந்த-நீங்கிய, கோல்-துலாம். 12

## அடக்கமுடைமை

இறைமுருகன் முன்னின் றிசைத்தமொழி தேரான்
சிறையிருந் தான்முன் சிவசிவா--- புறவுறுப்பின்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு,

தேரான்-தெளியான். சோகாப்பர்-வருந்துவர். 13
இழுக்கு-குற்றம்.

## ஒழுக்கமுடைமை

தன்மதுரை சொன்ன பழிக்கஞ்சித் தகவுரைத்தான்
தென்மதுரை நாதன் சிவசிவா-என்னின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

ஒல்ல-முடியா வழுக்கியும்-மறந்தும். 14

## பிறனில் விழையாமை

வரமிழந்தான் சீதையினால் வாழ்விழந்தான் பத்துச்
சிரமு மிழந்தான் சிவசிவா-உரமாம்
எனைத்துணைய ராயினு மென்னந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

சிரம்-தலை. 15

## பொறையுடைமை

ஐவரினு முன்னோன் அரசவியி லேபொறுத்த
செய்கைபெரி தன்றோ சிவசிவா-வையத்து
ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

ஒறுத்தார்-தண்டித்தார். 16

## அழுக்காறாமை

மேருவுட னிகலி விந்தமலை வீறழிந்து
சேருநில னூடே சிவசிவா-ஒரின்
அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.
வீறு-பெருமை- திரு-செல்வம். செற்று-கெடுத்து. 17

## வெஃகாமை

வாசவ னோராசை கொளவந்த பலனையிந்தத்
தேசமறி யாகோ சிவசிவா-பேசுங்காற்
சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாசேர
மற்றின்பம் வேண்டு பவர்.

வெஃகாமை-வௌவக்கருதாமை வாசவன்-இந்திரன்
மற்றின்பம்-நிலையுடைய இன்பம். 18

## புறங்கூறாமை

குந்திமகார் பேறுரைத்த கொற்றவனுற் தன்வரவுஞ்
சிந்தைசெய லுற்றான் சிவசிவா-நிந்தை
பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும். 19

## பயனில சொல்லாமை

மன்னவையிந் சொன்ன வசையாற் சிசுபாலன்
சின்னமுற்றான் அன்றோ சிவசிவா- என்னிற்
பயனில்சொற் பாராட்டு வானை மகனென்னல்
மக்கட் பதடி யெனல். 20

வசை-பழிஇ பதடி-பதர்.

## தீவினையச்சம்

பார முடிபத்தும் பறித்தபழி சேதுவினிற்
றீருதலி னாலே சிவசிவா-சாருமிகற்
றீயவை தூய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். 21

## ஒப்புரவறிதல்

தாயைத் தடிகவென்ற தந்தை மொழி தவறாச்
சேயைப்போ லுண்டோ சிவசிவா-ஆயுமிடத்து
ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 22

தடிக - சொல்லுக.

## ஈகை

தந்தைக் கிளமைத் ரும்பூ ருவைநிகர்வார்
சிந்திக்கி னெங்கே சிவசிவா-நிந்தித்து
இலனென்னும் எவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

எவ்வம்-இளிவரவு. 23

## புகழ்

ஒடிவரு புட்கன் றுடலையரிந் தீந்தபுகழ்
தேட அரிதே சிவசிவா-நாடிவரின்
ஈத லிசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை யுயிர்க்கு.
ஊதியம்---பயன். 24

## அருளுடைமை

அன்றுமகப் பெறுவாட் கன்னைவடி வாகியரன்
சென்றுதுணை செய்தான் சிவசிவா-என்றும்
அருட்செலவஞ் செல்வத்துட் செல்வம் பொருட்
[செல்வம்
பூரியார் கண்ணு முள.

பூரியார்-இழிந்தவர். 25

## புலான்மறுத்தல்

புன்புலா லுண்ணாது புள்ளடைந்த நன்கறிவார்
தின்பரோ தின்னார் சிவசிவா-துன்புறூஉந்
தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

புள்-பறவை, ஊன்-உடம்பு. 26

### தவம்

ஆடும் பரிசேவ லானான் அடற்சூரன்
தேடுந் தவத்தாற் சிவசிவா--- நாடுங்கால்
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

அடல்-வலிமை, ஈண்டு- இம்மையில். 27

### கூடாவொழுக்கம்

அட்டுநர னுனிட்டரக்கன் பழிக்கரசைத்
தெட்டிவழி கொண்டான் சிவசிவா-கிட்டினர்க்குப்
பற்றற்றே மென்பார் படிற்றோழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவும் தரும்.

அட்டு-சமைத்து, தெட்டி-வஞ்தசித்து, படிறு-வஞ்சனை.
ஏதம்-குற்றம். 28

### கள்ளாமை

இல்வலன் வாதாவி சுபடேதா யதுமலயச்
செல்வ முனிநோக்காற் சிவசிவா-சொல்லிற்
களவினா லாகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

மலயமுனி-அகத்தியன், ஆக்கம்- செல்வம். 29

### வாய்மை

பொங்குபுகழ் வாய்மைப் புனிதவதி யார்க்கானார்
செங்கனியை யீந்தார் சிவசிவா-துங்க
மனத்தொடு வாய்மைப் மொழியிற் றவ்த்தொடு
தானஞ்செய் வாரிற் றலை

வாய்மை-உண்மை. துங்கம்-பிரதாநம். 30

## வெகுளாமை

தாவு சினத்தாற் றலையிழந்தான் றக்கன்உமா
தேவிமக ளாயுஞ் சிவசிவா- ஆவன்மிகுந்
தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

சினம்-கோபம்.

## இன்னா செய்யாமை

புறம்பியத்து மின்னையுயிர் போக்கவந்தான் பட்ட
திறந்தெரி யாதோ சிவசிவா-பிறழ்ந்து
பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.
புறம்பியம்-ஒரூர். 32

## கொல்லாமை

மேவும் வனசரனோர் வேதியனைக் காத்தநலந்
தேவனறி வானே சிவசிவா-பூவுலகில்
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 33

வனசரன்-வேடன்.

## நிலையாமை

எங்கு மிறவா னிறந்ததொரு தூணீன்ற
சிங்கத்தா லன்றோ சிவசிவா-தங்கிநிலை
நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

கடை-இழிவு. 34

## துறவு

பத்ரகிரி மாதர்வசப் பட்டமன மீட்டதொரு
சித்ரகதை யன்றோ சிவசிவா-ஒத்தூத்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
தலைப்பட்டார் மற்றையவர்.

தீர-முற்ற. 35

### மெய்யுணர்தல்

சொற்சுவைசேர் வாசகத்திற் சொன்னபொரு ளீதென்
சிற்சபையே போனார் சிவசிவா- நற்கலைநூற் [றே
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார், தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

சிற்சபை-ஞானசபை, தலைப்படுவர்- அடைவர். 36

### அவாவறுத்தல்

சாரங்க மீது சடபரதன் சிந்தைவைத்துச்
சீரங்கம் பெற்றான் சிவசிவா--- நேரும்
அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தலா அப் பிறப்பீனும் வித்து.

தவாஅப்பிறப்பு-கெடாதுநின்றபிறப்பு. 37

### ஊழ்

உற்றாளைப் பெட்டகத்திட் டோட்டுமிலங் கேசனைப்
செற்றாள்வந் தென்பார் சிவசிவா-உற்றோரின் [பின்
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

ஊழ்-விதி. பெட்டகம். பெட்டி. 38

### இறைமாட்சி

பெற்றவைக்கென் போலிரண்டு பெரிலொரு வன்பி
சிற்றவைக்கா மென்றான் சிவசிவா-- உற்ற [ழைத்தாற்
முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப்படும். 39

### கல்வி

பார்க்கவன்பாற் கல்வி பயின்றகயன் பார்க்கவனோய்
தீர்க்கவரம் பெற்றான் சிவசிவா-வேற்கநன்றாக்
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கசடு-பழுது. 40

### கல்லாமை

புத்தர்மிக வாது புகன்றதுபோய் வாதவூர்ச்
சித்தர்முனே தானார் சிவசிவா-ஒத்தநெறி
கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

நனி-மிகவும். 41

### கேள்வி

வெய்யமரப் பேருரைத்த வேடனும் வான் மீகியெனுந்
தெய்வமுனி யானான் சிவசிவா-துய்ய
செவியுணர்விற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து.

அவி-தேவர்க்கு வேள்வித்தியிற் கொடுப்பன. 42

### அறிவுடைமை

சனக னுலகநெறி தாவாத ஞான
தினகர னானான் சிவசிவா-மனதினுடன்
எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

தாவாத, கெடாத தினகரன்- சூரியன். 43

### குற்றங் கடிதல்

தன்மகனான் கன்றினுக்குந் தான்மந் திரிக்குமென்றான்
சென்மன்றோ சென்மஞ் சிவசிவா-உன்னுங்கால்
தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகு மிறைக்கு. 44

### பெரியாரைத் துணைக்கோடல்

வன்றொண்டர் சேரரையும் வாவென் றானழைப்பச்
சென்றுதெரி வித்தார் சிவசிவா-என்றுமென்றுந்
தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

வன்றொண்டர்-சுந்தரர் 45

## சிற்றினஞ் சேராமை

அறியவச மோகலைக்கோட் டந்தணனு மாதர்
செறிய வசத்தன் சிவசிவா-பிறிதென்
மனநல மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும். 46

## தெரிந்து செயல்வகை

பன்மறையேதார்க் கானளித்த பாரரசன் கோம்பியெ
வென்ம மெடுத்தான் சிவசிவா- உன்னின்மிகு
நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்.
பண்பறிந் தாற்றாக் கடை. 47

## வலியறிதல்

நீச வுருவம் நீலனாள் திரிசங்கு
தேசிகனாற் பெற்றான் சிவசிவா-பேசின்
வினைவலியுந் தன் வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல். 48

## காலமறிதல்

யோகிருந்த கால முணரா துறுமதனன்
தேக மிழநதான் சிவசிவா-ஆகில்
அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

மதனன்-மன்மதன். அருவினை-முடிப்பதற்கு அரியவினை. 49

## இடனறிதல்

வயத்திரத மேறி வருமபிமன் றன்னைச்
செயத்திரதன் கொன்றான் சிவசிவா-முயற்சியுடன்
எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

துன்னி-சேர்ந்து. 50

## தெரிந்துதெளிதல்

அத்தன் பதத்தியற்று மாழி சலந்தரனைச்
சித்ரவதை செய்த சிவசிவா-தத்தம்

பெருமைக்க மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

ஆழி-சக்கரம், கட்டளைக்-- உரைகல். 51

### தெரிந்து வினையாடல்

சதமுகனை ராகவனஞ் சானகியைக் கொண்டே
சிதைய வதைத்தான் சிவசிவா-இதயத்து
இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்து
அதனை யவன்கண் விடல். 52

### சுற்றந்தழால்

அன்று தமருள்ள மறிந்தடைந்த வீடணற்குச்
சென்றுறுதி சொன்னான் சிவசிவா-ஒன்றும்
உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல்.
உழை-பக்கம். 53

### பொச்சாவாமை

இப்புவிமேற் கோயி லிறந்ததய னார்மறந்து
செப்புதலா லன்றோ சிவசிவா-எப்பொழுதும்
பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்பக்கொன் றாங்கு.

புவி-பூமி. பொச்சாப்பு- மறதி. நிரப்பு-வறுமை. 54

### செங்கோன்மை

மங்காத மங்குறனை மாறன் விலங்கிட்டான்
செங்கோன் மகிமை சிவசிவா-எங்கேனும்
வேலன்று வென்றி தருவது மன்னவன்
சோலதூஉங் கோடா தெனின்

டங்கல்-மேகம். கோடாதெனின்-வளையாதானால். 55

### கொடுங்கோன்மை

தாதை சிறையிருக்கத் தங்கையழக் கஞ்சனுறந்
தீதையெவர் சொல்வார் சிவசிவா-மேதினியில்

அல்லற்பட்டாற்றா தழுதகண் ணிரீன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.
மேதினி-பூமி.அல்லல். துன்பம். 56

### வெருவந்த செய்யாமை

வண்ண மகள்நோவ வருகீச கன்மடிந்தான்
திண்ணமிது வன்றோ சிவசிவா-எண்ணின்
வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்த மொல்லைக் கெடும்.

வெருவந்த-அஞ்சத்தக்கன. ஒருவந்தம்-ஒருதலை. 57

### கண்ணோட்டம்

முப்புரத்தை நீறாக்கி மூவரையுயங் காத்தநலஞ்
செப்ப முடியாதே சிவசிவா-ஒப்பிற்
கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்கு
உரிமை யுடைத்திவ் வுலகு.
மூவர்-தாரகாஷன், கமலாஷன், வித்யுன்மாலி. 58

### ஒற்றாடல்

வந்த சுகசாரர் வடிவை நிருதனன்றிச்
சிந்தைசெய்தார் வாண்பார் சிவசிவா-பந்தந்
துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்து
என்செயினுஞ் சோர்வில தொற்று.

நிருதன்-அசக்கன். படிவத்தர்-விரத ஒழுக்கத்தினர். 59

### ஊக்கமுடைமை

நல்லதின மென்றே நரகனிறு நாளுலகிற்
செல்லவரம் பெற்றான் சிவசிவா-வல்லமைசேர்
உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு

நரகன்-நரகாசுரன். இறுநாள்-இறந்தநாள். உள்ளம்-ஊக்கம்
செருக்கு- தன் மதிப்பு. 60

## மடியின்மை

தந்தை யுளநோக்கித் தவமே வியதுருவன்
சிந்தைவலி தன்றோ சிவசிவா- நந்து
மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு.

மடி-சோம்பல். தாயது-தாவியது. 61

## ஆள்வினையுடைமை

எய்தா திராமற் கிலக்குவன்போ லென் றுலைக்கச்
செய்தானடிமை சிவசிவா-நொய்தேனும்
இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்

ஆள்வினை-மெய்ம்முயற்சி. 62

## இடுக்கணழியாமை

இரணியன் றான்செய்த இடும்பை தனைமைந்தன்
திரனமாக் கண்டான் சிவசிவா-முரணி
அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்க ணிடுக்கட்படும்.

திரணம் -துரும்பு. 63

## அமைச்சு

போயவர சாளி புகவெழக்கண் டாளியுடல்
தீயினமைச் சிட்டான் சிவசிவா-வாயிற்
றெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.
அமைச்சு- மநதிரியின் தன்மை 64

## சொல்வன்மை

என்றும் பதினாறென அரனா ரோதியசொல்
சென்றதே யின்றுஞ் சிவசிவா-நன்றிபெறச்
சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து. 65

## வினைத்தூய்மை

மைந்தன் முடிவீழ்த்தான் மாள்கசெனக் கைவிரித்த
சிந்துபதி பட்டான் சிவசிவா-தந்தஞ்
சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

சலம்--தீயவினை. 66

## வினைத்திட்பம்

எய்து முருவறிந்து மேந்திழையாள் பாவனைதான்
செய்தபடி யாச்சே சிவசிவா-வையத்தின்
எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

திட்பம்-திண்மை. 67

## வினைசெயல்வகை

மங்கைமுலைக் கச்சவிழ்த்த மாயச் சயந்தனொரு
செங்க ணிழந்தான் சிவசிவா-எங்கும்
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

கச்சு-இரவிக்கை. படு-உண்டாகின்ற. 68

## தூது

சானகியைக் கண்டரக்கன் றானிகலி வாலிலிடுந்
தீநகர் லீட்டான் சிவசிவா-ஊனுக்கு
இறுதி பயப்பினு மெஞ்சாத திறைவற்கு
உறுதி பயப்பதாந் தூது.

இகலி-பகைந்து எஞ்சாது-ஒழியாது. 69

## மன்னரைச்சேர்ந்தொழுகல்

அன்றரசோ அடரண்ட னாடுமுரை யால்வமே
சென்றுபிரையிந்தான் சிவசிவா-நன்றிபெற
வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

வேட்பன-விரும்புவன. 70

### குறிப்பறிதல்

வென்றியி ராமனெடு வில்லைமுனி வன்குறிப்பாற்
சென்று வளைத்தான் சிவசிவா-மன்றிற்
குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

மன்று-சபை 71

### அவையறிதல்

மன்றிற் பரசமய கோளரிமுன் வல்லமணர்
சென்றநிலை யென்னாஞ் சிவசிவா-துன்றுதுறவு
ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புலம்
எறறுணர்வார் முன்ன ரிழுக்கு.

பரசமயகோளரி-சம்பந்தர். 72

### அவையஞ்சாமை

முத்தமிழ்ச் சங்கத்தவரை மூதுரையால் வள்ளுவருஞ்
சித்தமகிழ் வித்தார் சிவசிவா-எத்தனையுங்
கற்றாருட்கற்றா ரெனப்படுவர் கற்றார் முற்
கற்ற செலச்சொல்லு வார் 73

### நாடு

பொன்னியென வேழமுனி பொற்கரக நீர்கவிழ்த்த
சென்னிவள நாடே சுவசிவா-நன்னாடு
இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

பொன்னி-காவிரி. வேழம்-யானை. 74

### அரண்

கதாத்தா னசலக் கருணா கரன்கலிங்கஞ்
கேர்த்தான் றிறத்திற் சிவசிவா-பார்த்தால்
எனைமாட்சித் தாயினு மென்னாம் வினைமாட்சி
யில்லார்க ணில்லா தரண்.

கலிங்கம்-கலிங்கநாடு 75

### பொருள் செயல்வகை

கொண்டான் வடகிரியிற் கூடலரசுபொருட்
செண்டா லடித்தே சிவசிவா-கண்டாயில்
ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனையிரண்டு மொருங்கு.

வடகிரி-இமயமலை. கூடல். மதுரை. காழ்த்தல்-முதிர்தல். 76

### படைமாட்சி

பார்த்திவனைக் கட்டவிழ்த்துப் பத்ராய வன்பகை
தீர்த்தொருவனின்றான் சிவசிவா-பார்த்தங்கு [யைத்
ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

உவரி-கடல்,நாகம்-பாம்பு. 77

### படைச்செருக்கு

உரமிறந்து போகாத வுள்ளத் தரவான்
சிரமறுந் துற்றான் சிவசிவா-தரமா
விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தந் னாளை யெடுத்து.
விழுப்புண்-முகத்தினும் மார்பிணும் பட்ட புண். 78

### நட்பு

உற்ற குசேலனல முற்றிருத்தற் காவுவந்தோர்
சிற்றுணவுட் கொண்டான் சிவசிவா-சுற்றும்
உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதா நட்பு.

உடுக்கை--- ஆடை. 79

### நட்பாராய்தல்

துருவதன் கட்டுண்டான் துரோண னடியாராற்
செருவி னின் முனஞ் சிவசிவா-வருவதன்முன்
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

செரு-சண்டை, கேண்மை , நட்பு 80

### பழைமை

குறித்தரசு கன்னனுடன் கோதை வளையாடத்
தெரித்த மணியுஞ் சிவசிவா-பொறுக்கின்
அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.
கோதை-துரியோதனன் மனைவி 81

### தீநட்பு

பொன்மானென் றாசைகொண்ட பொன்னனையாள் வட்
சென்பாந்த்ர பாவஞ் சிவசிவா-சொன்னோங் (டதுயர்
கனவிலு மினனாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.
பொன்-திருமகள். 82

### கூடாநட்பு

தாயிபோல் வருமலகை தன்னட் பறிந்துமவள்
சேய்போ லிருந்தான் சிவசிவா-மாயனெதிர்
நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொல்
ஒலலை யுணரப்படும்.

அலகை-புசனை. ஒட்டார்-பகைவர். 83

### பேதைமை

தன்றலைமேற் றன்கைவைத்தோர் தானவன்முன் பெற்ற
சென்றிறக்க லாச்சே சிவசிவா-என்றென்றும் (வரஞ்
பொய்படு மொன்றே புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொவின்
தானவன்-அசுரன், கை-செய்யுமுறைமை. 84

### புல்லறிவாண்மை

மாற்கு மதுவுங் கைடவனும் வாழ்நாளைத்
தீர்க்க வரமீந்தான் சிவசிவா-பார்க்கின்
அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் றவம். 85

## இகல்

தாயடிமை வானமுதந் தந்தகற்றச் சார்வயின
தேயனைமால் வென்றான் சிவசிவா-வேய
இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

மிகல்-வெல்லல். 86

## பகைமாட்சி

ஐங்கரனென் றோரா அரக்கன் றலைமோதிச்
செங்கரங்கள் நொந்தான் சிவசிவா-துங்க
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலான் பற்றார்க் கினிது.
பற்றார்-பகைவர் 87

## உட்பகை

வென்றிபுனை சம்பரனை வென்றதவ னில்லிருந்து
தென்றலெனுந் தேரான் சிவசிவா-என்றும்
அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொருது
உட்பகை யுற்ற குடி. 89

## பெரியாரைப் பிழையாமை

வந்த முனிவோரை வணங்கா வரமுனியைச்
சிந்தைசெயல் வேண்டுஞ் சிவசிவா-முந்தும்
பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும். 90

## பெண்வழிச் சேறல்

ஒது கனிபொருந்தும் உங்கள் மனத்தினுற்ற
சேதிசொலினென்றான் சிவசிவா-ஆதலினால்
இல்லான்கட் டாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 91

## வரைவின்மகளிர்

போச னுரைக்கிசைந்த புண்ணியனை வேசைகொன்

தேச மறியாதோ சிவசிவா-பேசுமிடத்து (றான்
அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார்
இன்சொ லிழுக்குத் தரும்

ஆய்தோடி-ஆராய்ந்த வளையல். 92

**கள்ளுண்ணாமை**

சுக்கிரனார் சாபத் தொடர்பறிந்தோர் கள்ளிருந்த
திக்கினடப் பாரோ சிவசிவா-மக்களென்பார்
கள்ளுண்ணாப் போழ்திற களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொ லுண்டதன் சோர்வு. 93

**சூது**

வெற்றிநளன் சூதாடி வீடுவிட்டுக் காடுறைந்தான்
சிற்றிடையுந் தானுஞ் சிவசிவா சுற்றும்
உடைசெல்வ மூணொளி கல்வியென்றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின்.
ஆயம்-சூது. 94

**மருந்து**

மாதவரூண் மாமருதின் மங்கையர்க்கு முறிபிறப்பின்
சேதிதெரி விக்குஞ் சிவசிவா-ஆதலினான்
மாறுபாடில்லாத உண்டி மறத்துண்ணின்
ஊறுபாடில்லை யுயிர்க்கு.

ஊறுபாடு-துன்பம் 95

**குடிமை**

தந்தை வதுவை தவிராது வீடுமன்போய்ச்
சிந்தைதெளி வித்தான் சிவசிவா-நந்தா
நலம்வேண்டின் நாணுடைமை வேண்டுங் குலம்
வேண்டுக யார்க்கும் பணிவு (வேண்டின்
வதுவை-மணம்-நந்தா-கெடாத. 96

**மானம்**

அன்றெருவை வேந்த னரிவைதனக் காவமர்க்குச்
சென்றுயிரை யீந்தான் சிவசிவா-துன்று
மயிரிநீப்பின் வாழாக் கவிரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

எருவை-கழுகு,.அரிவை-பெண். 97

**பெருமை**

நல்லூழி நான்குமனு நாரியுட னண்ணவரி
செல்வமக வானான் சிவசிவா-ஒல்லும்
பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல் 98.

**சான்றாண்மை**

தாரு வனமுனிவர் தம்பிழைநோக் காதருளே
சேரநடஞ் செய்தான் சிவசிவா-ஒருமவர்
இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 99

**பண்புடைமை**

பாந்தட் பகைமுயலைப் பற்றுதலா லென்றுமதி
தேர்ந்து மதைநீக்கான் சிவசிவா-கூர்ந்த
அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லாதவர்.
பாந்தள்-பாம்பு. 100

**நன்றியில் செல்வம்**

நல்விசயன் கண்ணன்வர நன்மைமபுரி யாமறையோன்
செல்வமிருந் தென்னாஞ் சிவசிவா-தொல்லுலகில்
நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத்தற்று. 101

**நாணுடைமை**

சாரும் பதியிலராய்த் தாருவன மாதர்தமைச்
சேரஇறை சென்றான் சிவசிவா - பாரின்மிசை
நாணகத் தில்லா ரியக்கம் மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று.
சாண்-கயிறு. 102

**குடிசெயல்வகை**

துய்ய பகீரதனுந் தொல்லரச ரல்லறச்
செய்தவமென் சொல்வாஞ் சிவசிவா- வையமதில்
நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

## உழவு

வள்ளிபுனங் காத்திருந்த வாறேது வான்பயிர்செய்
தெள்ளிமையா லன்றோ சிவசிவா-உள்ளுமிடத்து
ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு.
கட்டல்-களை யெடுத்தல். 104

## நல்குரவு

மாமணியாற் கோசிகன்போய் மன்விடந்தீ ரான்வறு
தீமையினான் மீண்டான் சிவசிவா-ஆமுன்
அறஞ்சாரா நல்குர வீன்றாத யானும்
பிறம்போல நோக்கப் படும். 105

## இரவு

தருமகுண மாவலிபாற் றானமெனச் சேர்ந்தான்
திருமகி ணன்றான் சிவசிவா-பரிவின்
இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
தேற்றாதார் - அறியாதார். 106

## இரவச்சம்

ஒன்றுதவ வேட முடன்சரா சந்தன்முனஞ்
சென்றிரந்தார் மன்னர் சிவசிவா-என்றுங்
கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும் 107

## கயமை

வாரிபழி தாரா வருண னடைக்கலமாய்ச்
சேரவழி செய்தான் சிவசிவா-ஆருமிதஞ்
கோல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

வாரி-கடல் 108

## தகையணங்குறுத்தல்

ஆரந்தசுர ரானா ரமுதணங்கைக் கண்டுமகிழ்
சேர்ந்தசுர ரானார் சிவசிவா-சார்ந்து தனை
உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

### குறிப்பறிதல்

பைந்தொடியுஞ் சுந்தாரும் பார்த்தகுறிப் பாலன்றோ
சிந்தையுமொன் றானார் சிவசிவா-தந்தமது
கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில. 110

### புணர்ச்சி மகிழ்தல்

பார்த்தன் சுபத்திரைதன் பார்வையினான் மெய்வெதுப்
தீத்தனைக் கொண்டான் சிவசிவா- மாத்திரைநா (புந்
நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள். 111

### நலம்புனைந்துரைத்தல்

நந்து சசிமுகத்தை நாள் மதியென் றேநகுடன்
சிந்தைமகிழ் கொண்டான் சிவசிவா-முந்தும்
அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து

அவிர்-விளங்குகின்ற. 112

### காதற்சிறப்புரைத்தல்

காதற் குணம்விருத்த காசிவிப சித்துரைத்த
சேதித் சிறமே சிவசிவா- நீதிச்சொல்
உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். 113

### நாணுத்துறவுரைத்தல்

சேர விரைந்துவந்துஞ் சீதை யிராமனுளந்
தேர விருந்தாள் சிவசிவா-பாரிற்
கடலன்ன காம முழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

உழத்தல்-அனுபவித்தல் 114

### அலரறிவுறுத்தல்

இந்துநுதன் மாயை விரகெண்ணி விலாசிசொலச்
சிந்தைமகிழ் கொண்டாள் சிவசிவா புந்தி
களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது. 115

### பிரிவாற்றாமை

கோதைவரி விற்றடக்கைக் கொண்டல்பிரி லாற்றாமற்
சீதைவனம் போனாள் சிவசிவா-ஓதுமிடத்து
இன்னா தினனில்லூர் வாழ்த லதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு.

கொண்டல்,மேகம் போலும் நிறமுடைய திருமால், இனி யார்-அன்புடையார். 116

### படர்மெலிந்திரங்கல்

மாறனொரு நாட்பிரிவின் மங்கையர்க ணிடிரவைச்
சீறியுரை செய்தார் சிவசிவா-கூறிக்
கொடியார் கொடுமையிற் றாங்கொடிய இந்நாள்
நெடிய கழியு மிரா. 117

### கண்விதுப்பழிதல்

நாடரிய கண்ணே நளனை விழித்தகற்றித்
தேடியழ லென்னோ சிவசிவா-ஒடிக்
கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து.

விதுப்பு-விரைவு-கலுழும்-அழும். 118

### பசப்புறுபருவரல்

மாரன்மகன் மஞ்சமுடன் வாராமுன் வாணன்மகள்
சேருநீனை வாலே சிவசிவா-சார்வாற்
பசந்தா ளிவளென்ப தல்லதா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்.

பசப்பு -நிறவேறுபாடு பருவரல்-வருத்தம்,மஞ்சம், கட்டில் தறந்தார்-பிரிந்தார்.

### தனிப்படர்மிகுதி

முல்லைமட வார்கண்ணா முன்னின் றொருமொழியாற்
செல்லறவி ரென்றார் சிவசிவா-சொல்லின்
நசைஇயார நல்கா ரெனினு மவாமாட்டு
இசையு மினிய செவிக்கு

படர்.துன்பம்.நசைஇயார்-விரும்பப்பட்டவர்.இசை-சொல். 120

### நினைந்தவர் புலம்பல்

சந்தனுவுங் கங்கை தனைப்படத்தி லேயெழுதிச்
சிந்தையல மந்தான் சிவசிவா-தந்தமனத்து
உள்ளினுங் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.
அலமந்தான்-வருந்தினான். 121

### கனவுநிலை யுரைத்தல்

நித்திரையி லுற்றணைந்தான் நேய னிரத்நவல்லி
சித்தரரே கைக்குச் சிவசிவா-ஒத்துரைக்கத்
துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து.

துஞ்சல்-தூங்கல். 122

### பொழுதுகண் டிரங்கல்

வாடிக் கணவனுறா வல்லிரவிற் பிங்கலையுந்
தேடிமன நொந்தாள் சிவசிவா-ஓடிப்
பொருள் மாலை யாளரை யுள்ளி மருள்மாலை
மாயுமென் மாயா உயிர்.

மருள்மாலை மயங்கும் மாலைப் பொழுது. 123

### உறுப்புநலனழிதல்

வைதாள் விசயன் மருவா துருப்பசியென்
செய்யவா ளயர்ந்தாள் சிவசிவா-மெய்யாக்
கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

வைதாள்-திட்டினாள். மருவாது-சேராது.
தொல்கவின்-பழைய இயந்கை அழகு. 124

## நெஞ்சொடு கிளத்தல்

வண்ண உருக்குமணி மாயன் மணம்புணர்தல்
திண்ணமென வுற்றாள் சிவசிவா-உள்நினைவிற்
செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றா லுறாஅ தவர்.
களத்தல்-சொல்லுதல். செற்றார்-வெறுத்தார். 125

## நிறையழிதல்

அன்றுவனத் தண்ணலருகே நிறையழிந்தார்
சென்றுமுனி மாதர் சிவசிவா-ஒன்ற
நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

நிணம்-கொழுப்பு 126

## அவர்வயின் விதும்பல்

மன்னுமுன்கே ளென்னவுஞ்சீ மந்தனிதே றாமலுளஞ்
சின்னமுற லென்னோ சிவசிவா-உன்னில்
ஒருநா ளெழுநாள்போற் செலலுஞ்சேட் சென்றார்.
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.
சேட்சென்றார் - தூரத்திலே சென்ற காதலர். 127

## குறிப்பறிவுறுத்தல்

குன்றிற் சுமதி குறிப்பாற் றருமகுத்தன்
சென்றுமயல் கொண்டான் சிவசிவா-என்றும்
முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

மொக்குள்-முகிழ்ப்பு;முதிர்ச்சியாற் புடைபடுதல். 128

## புணர்ச்சி விதும்பல்

மன்ன னகலியைநீ வஞ்சனை நீங் காமலுடற்
சின்னமுற லென்னோ சிவசிவா-என்னவற்
காணங்காற் காணேன் தவறாய காணாக்காற்
காணேன் தவறல் லவை. 129

### நெஞ்சொடு புலத்தல்

கன்றால் விளவெறிந்த கண்ணனுட னெம்மைவிட்டுச்
சென்றாயே நெஞ்சே சிவசிவா-ஒள்றாவித்
துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி. 130

### புலவி

சத்திய பாமைமலர் தந்திலனென் றூடவுடன்
சித்தமகிழ் வித்தான் சிவசிவா-நித்தமுணற்கு
உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது.
மிக்கற்றா னீள விடல்.

புலவி-ஊடல். 131

### புலவி நுணுக்கம்

இப்பிறப்பி லேபிரியே னென்றநள னோடூடல்
செப்பவரி தன்றே சிவசிவா-அப்படியே
இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண்ட னள். 132

### ஊடலுவகை

மான்மகள் பாலூடி மரமானான் மழகளிற்றன்
தேனனையாள் காந்தன் சிவசிவா-ஏனெனிலங்கு
ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

காந்தன்-கணவன், முயங்கல்-கலத்தல். 133

## சிவசிவ வெண்பா

### முற்றிற்று

ஆயிரத் தறுநூற் றொன்பது பத்தாம்
        ஆண்டுசெல் சகாப்தநா ளதனில்
மாயிரு ஞாலத்த திகமமாந் ததில்லை
        மன்றில்வாழ் சென்னமல்லையர்
பாயிருள் துரக்கும் பரிதிபோற் பாவப்
        படாகற் றிடுஞ்சிவ வெண்பாத்
தீயவை போக்கிப் பரகதி சேரச்
        செப்பினன் தெளிதவத் தவர்க்கே.